## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

**1.** இந்தியா அதன் முதல் எதிர்ப்பு செயற்கைக்கோள் **(Anti-Satellite) (A-SAT)** ஏவுகணை திறனை வெற்றிகரமாக பின்வரும் எந்த பயணத்தின் **(mission)** கீழ் சோதித்தறிந்தது?

**[A] Mission Avatar**
**[B] Mission Talwar**
**[C] Mission Nisar**
**[D] Mission Shakti**

- ✓ ஒடிசாவில் உள்ள டாக்டர் ஏபி ஜே அப்துல் கலாம் தீவில் இருந்து மார்ச் **27** ம் தேதி பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பு **(டி.ஆர்.டி.ஓ)** வெற்றிகரமாக தனது முதலாவது ஆண்டி சேட்டிலைட் **(A-SAT)** ஏவுகணை சோதனை 'மிஷன் சக்தி' **(Mission Shakti)** ஒன்றை நடத்தியது.
- ✓ **DRDO** பாலிஸ்டிக் ஏவுகணை பாதுகாப்பு இடைசெயல் ஏவுகணை ஒன்றை உருவாக்கியுள்ளது. இது மூன்று நிமிடங்களுக்குள் பூமிக்கு **300** கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் ஒரு குறைந்த புவியின் சுற்றுப்பாதையில் **(LEO)** ஒரு நேரடி செயற்கைக்கோளை **(Live Satelite)** வெற்றிகரமாக **Shut Down** செய்தது.
- ✓ எனவே, மிஷனரி சக்தி இந்தியாவின் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பாதுகாப்பதற்கான ஒரு முக்கிய படியாகும்.
- ✓ இந்த சாதனையைப் பயன்படுத்தி, அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் சேர்ந்து நான்கு குழுமங்களில் இந்தியா இணைந்துள்ளது.

**2. AI** இன் அடிப்படையிலான நோய் கண்டறிதலை எந்த ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கினர் ?

**[A] IIT-Hyderabad**
**[B] IIT-Kharagpur**
**[C] IIT-Delhi**
**[D] IIT-Bombay**

- ✓ மலேரியா, காசநோய் **(TB)**, குடலிறக்க ஒட்டுண்ணி மற்றும் கர்ப்பப்பை, வாய்ப் புற்றுநோய்களை சில மில்லிசெகண்டில் எளிதாக கண்டறியும் வகையில் செயற்கை நுண்ணறிவு **(AI)** - குறைந்த சக்தி வாய்ந்த மின்னணு வன்பொருள் அமைப்பை ஐஐடி-டெல்லி ஆராய்ச்சியாளர்கள் வடிவமைத்துள்ளனர்.
- ✓ மனித நுட்ப நிபுணர்களுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் மூலம் வளங்கள் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் சுகாதார அணுகலுக்குப் பயன்படும் புத்திசாலித்தனமான நரம்பியல் அமைப்பு முறையை ஆய்வு செய்வதில் இந்த ஆராய்ச்சி கவனம் செலுத்துகிறது.

✓ ஆய்வாளர்களால் நிரூபிக்கப்பட்ட அணுகுமுறை சிறிய, குறைந்த சக்தி மற்றும் நோய்களை கண்டறிவதில் அதிக துல்லியத்துடன் வகைப்படுத்த முடியும்.

3. 2019 உலக தியேட்டர் தினம் (WTD) சமீபத்தில் எந்த தேதியில் கடைபிடிக்கப்பட்டது ?

[A] மார்ச் 27
[B] மார்ச் 25
[C] மார்ச் 28
[D] மார்ச் 24

✓ மார்ச் 27 அன்று ஒவ்வொரு ஆண்டும் உலக தியேட்டர் தினம் மேடையின் சக்தியை கவனத்தில் கொண்டு கடைபிடிக்கப்படுகிறது.
✓ பொழுதுபோக்கவும், கற்பிப்பதற்கும், நம்மை மாற்றுவதற்கும் தொடர்ந்து தியேட்டர் கலைகளின் முக்கியத்துவத்தை இது சொல்கிறது.
✓ கலைநிகழ்வுக்கான உலகளாவிய அமைப்பான சர்வதேச தியேட்டர் இன்ஸ்டிடியூட் (ஐ.டி.ஐ) 1961 ஆம் ஆண்டில் இந்த நாளை **WTD** அறிவித்தது.

4. அண்மையில் செய்திகளில் வெளியான GRAPES-3 பரிசோதனை இந்தியாவின் பின்வரும் எந்த தளங்களில் அமைந்துள்ளது?

[A] Leh
[B] Ooty
[C] Tawang
[D] Udaipur

✓ உலகில் முதன்முறையாக,**December 1, 2014** அன்று ஊட்டி நகரில் **GRAPES-3** மைன் தொலைநோக்கி வசதி கொண்டு ஆராய்ச்சியாளர்கள் மின்னல் மின் திறன், அளவு மற்றும் உயரத்தை அளவிடுகின்றனர்.
✓ இடி மின்னல் பற்றிய ஆய்வு வானூர்திகளை வழிநடத்தவும், விமானங்களில் **short circuits** யை தடுக்க உதவுகிறது.

5. உலகின் மிகப்பெரிய e- கழிவு (e-waste) மறுசுழற்சி மையம் எந்த நகரத்தில் திறந்துள்ளனர்?

[A] Dubai
[B] Tehran
[C] Paris
[D] Istanbul

- ✓ உலகின் மிகப்பெரிய **e-** கழிவு **(e-waste)** மறுசுழற்சி வசதி சமீபத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் **(UAE)** துபாய் தொழில்துறை பூங்காவில் **280,000** சதுர அடி பரப்பளவில் திறந்துள்ளனர்.
- ✓ சுவிஸ் அரசாங்க ஏற்றுமதி நிதி முகமைக்கு ஆதரவுடன் "**Enviroserve**" நிறுவனம் **120** மில்லியன் **dirhams** ல்**($ 5** மில்லியன்**)** இந்த திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

**6)** எந்த இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், வெப்ப அலையின் போது நகர்ப்புறம் அல்லாத பகுதிகளை விட நகர்ப்புற பகுதிகளில் வெப்பம் குறைவாக இருக்கும் என்று கண்டறிந்தனர்?

**[A]** ஐஐடி ரூர்க்கி

**[B]** ஐஐடி கராக்பூர்

**[C]** ஐஐடி காந்திநகர்

**[D]** ஐஐடி ஹைதராபாத்

- ✓ ஐஐடி காந்திநகரைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இந்தியாவின் 89 நகர்ப்புற பகுதிகளில் ஒரு ஆய்வு நடத்தினர். அவ்வாய்வில் வெப்ப அலையின் போது நகர்ப்புற பகுதிகள் மற்றும் நகர்ப்புறம் அல்லாத பகுதிகள் ஆகிய இரண்டு பகுதிகளிலும் வெப்பமானது கணிசமாக உயர்ந்து இருந்தாலும் நகர்ப்புறம் அல்லாத பகுதிகளோடு ஒப்பிடுகையில் நகர்ப்புற பகுதிகளில் வெப்பம் குறைவாகவே இருந்ததைக் கண்டறிந்தனர்.
- ✓ 1.94 டிகிரி செல்சியஸில் நகர்ப்புறம் அல்லாத பகுதிகளில் பகற்பொழுதின் போது ஏற்பட்ட வெப்ப உயர்வானது நகர்ப்புற பகுதிகளைவிட (0.14 டிகிரி செல்சியஸ்) குறிப்பிடத்தகுந்த வகையில் அதிகமாக இருந்தது .
- ✓ ஆய்வின்படி, வெப்ப அலைகளின் போது, நகர்ப்புற பகுதிகள் அதனைச் சுற்றியுள்ள நகர்ப்புறம் அல்லாத பகுதிகளை விட வெப்பம் குறைந்து காணப்பட்டன. 44.5 டிகிரி செல்சியஸில் நகர்ப்புறம் அல்லாத பகுதிகள் நகர்ப்புற பகுதிகளை (43.7 டிகிரி செல்சியஸ்) விட வெப்பமாக இருந்தன.
- ✓ ஆனால் இரவு வேளைகளில் எல்லா நகர்ப்புற பகுதிகளுமே அதனைச் சுற்றியுள்ள நகர்ப்புறம் அல்லாத பகுதிகளைவிட வெப்பமாக இருந்தன. கிராமப்புறங்களில் .பயிர் அறுவடைக்கு பின் வரும் கோடை காலத்தில் நிலவும் பசுமைக்குறைவு இதற்கு காரணமாக இருக்கலாம் என்று அந்த ஆய்வு பரிந்துரைத்தது. இந்த ஆய்வறிக்கை **Environmental research communications** என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

**7)** சமீபத்தில் காலமான ஆஷிதா அவர்கள் எந்த இந்திய மொழியின் நன்கு அறியப்பட்ட எழுத்தாளர்?

**[A]** தெலுங்கு

**[B]** மலையாளம்

[C] ஒடிசி

[D] தமிழ்

✓ சிறந்த மலையாள எழுத்தாளராக அறியப்பட்ட ஆஷிதா அவர்கள் கேரள மாநிலம் திருச்சூரில் மார்ச் 27 2009 அன்று காலமானார்.

✓ ஏப்ரல் ஐந்து 1956இல் திருச்சூரில் உள்ள பழையனூரில் பிறந்த இவர் தனது தனித்துவமான எழுதுமுறையினாலும் கதைகளுக்கு தெரிவு செய்யும் தலைப்புகளினாலும் மலையாள பெண் எழுத்தாளர்கள் இடையே தனக்கான தனி இடத்தை உருவாக்கினார்.

✓ மலையாள எழுத்துலகத்தில் தனது மொழிபெயர்ப்புகளின் மூலம் ஹைக்கூ கவிதைகளை பிரபலமடையச் செய்த இந்த எழுத்தாளர் தனது கதைகளின் மூலம் வாழ்க்கையை உணர்ச்சிகரமாக வர்ணனை செய்வதிலும் நன்கு அறியப்பட்டார்

✓ மழ மேகங்கள், ஒரு ஸ்திரீயும் பரயாதது, விஷ்மாய சிஹ்னங்கள், அபூர்வ விரமங்கள் மற்றும் ஆஷிதாயுடே கதைகள் ஆகியவை இவரது குறிப்பிடத்தகுந்த படைப்புகள்.

**8) செய்திகளில் சில சமயம் காணப்படும் mankading என்ற வார்த்தை எந்த விளையாட்டுடன் தொடர்புடையது?**

[A] கூடைப்பந்து

[B] மட்டைப்பந்து

[C] கால்பந்து

[D] ஹாக்கி

✓ ஒரு ரன் அவுட் முறையான **mankading** ல் பந்துவீசப் படுவதற்கு முன்பு எதிர்முனை ஆட்டக்காரர் கிரீஸ் கோட்டை தாண்டி வெளியே சென்று விட்டால் பந்துவீச்சாளர் பெயிலில் பந்தை அடித்து அவரை ஆட்டம் இழக்கச் செய்வார்

✓ விதிமுறைக்கு உட்பட்டு ஆட்டம் இழக்கச் செய்யும் முறையாக இது இருந்தாலும் ஆட்டத்தின் துடிப்புக்கு எதிரான ஒன்றாக கருதப்படுகிறது. புகழ்பெற்ற இந்திய பந்துவீச்சாளரான **vinoo mankad** என்பவர் அறிமுகப்படுத்திய இம்முறைக்கு அவரது பெயரே சூட்டப்பட்டது.

✓ **1947**இல் இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையிலான ஆட்டத்தில் பிரவுன் என்னும் எதிர்முனை ஆட்டக்காரர் பந்துவீச்சிற்கு முன் கிரீஸ் கோட்டிற்கு வெளியே சென்றபோது இரு முறைகள் பெயிலில் பந்தை அடித்து அவரை ஆட்டமிழக்கச் செய்தார், மான்காட்.

✓ **2019** ஐபிஎல் ஜெய்ப்பூரில் உள்ள சவாய் மான்சிங் மைதானத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தின் போது கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி தலைவரும் பந்து வீச்சாளருமான

ரவிச்சந்திரன் அஸ்வின் ஜோஸ் பட்லர் என்பவரை **mankading** முறையில் ரன் அவுட் செய்ததால் சமீபத்தில் இந்த ரன் அவுட்முறை செய்திகளில் வெளியானது குறிப்பிடத்தக்கது.

- ✓ கிரிக்கெட் விதி **41.16** இன் படி, பந்துவீச்சாளரிடம் இருந்து பந்துவீச்சு எதிர்பார்க்கப்பட்ட நேரத்திற்கு முன்பே எதிர்முனை ஆட்டக்காரர் தனது கிரீஸ் கோட்டை தாண்டி விட்டால், பந்துவீச்சாளர் அவரை ரன் அவுட் செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்.
- ✓ பந்து வீச்சாளரின் அம்முயற்சி வெற்றி பெற்றாலும் இல்லாவிட்டாலும் அந்த பந்து ஓவரில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாது. எதிர்முனை ஆட்டக்காரரை ஆட்டம் இழக்கச் செய்யும் முயற்சியில் பந்துவீச்சாளர் தோற்றுவிட்டால் நடுவர் அவரை அழைத்து டெட் பாலுக்கான செய்கையைக் காட்டலாம் என்றும் அந்த விதி கூறுகிறது.

9) இந்தியாவின் தேர்தல் அலுவல்களை ஊக்குவிக்க பிரத்தியேகமான மென்கருவியை எந்த தொழில்நுட்ப பெருநிறுவனம் வெளியிட்டுள்ளது?

[A] ஃபேஸ்புக்

[B] மைக்ரோசாப்ட்

[C] இன்ஃபோசிஸ்

[D] ட்விட்டர்

- ✓ 2019 நாடாளுமன்ற தேர்தல்களை முன்னிட்டு பேஸ்புக் நிறுவனமானது தேர்தல்களில் சமூக பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் **candidate connect** மற்றும் **share you voted** ஆகிய இரண்டு பிரத்தியேக மென்கருவிகளை வெளியிட்டுள்ளது.
- ✓ **candidate connect** என்ற முதல் அம்சம் வேட்பாளர்கள் பதிவேற்றம் செய்யும் 20 நொடி குறும் காணொளிகளை மக்கள் பார்க்கும் வகையில் செய்ததோடு, தெரிவு செய்யப்பட்ட ஒரே தலைப்பில் ஒவ்வொரு வேட்பாளர்களின் பேச்சினை **12** மொழிகளில் கேட்கவும் அவற்றை ஒப்பீடு செய்து பார்க்கவும் வழிவகை செய்துள்ளது
- ✓ **share you voted** என்ற அம்சமானது வாக்குப்பதிவு தகவல்களை மக்களுக்கு தருவதோடு அவர்கள் வாக்கு செலுத்தியதை அறிவிக்கவும் கொண்டாடவும் வழிவகை செய்துள்ளது. மறுப்புக்கு இடம் உள்ள பதிவுகளை உடனுக்குடன் கண்டறியவும் மேற்பார்வை செய்யவும் **24*7** பொறுப்புக் குழு ஒன்றை தேர்தலுக்காக ஃபேஸ்புக் நிறுவனம் நிறுவியுள்ளது.
- ✓ சிங்கப்பூரில் இருந்து இயங்கும் இந்த தேர்தல் பொறுப்பு குழுவானது இந்திய தேர்தல் ஆணையத்தோடு சேர்ந்து பணியாற்றும்.

**10)** சமீபத்தில் மறைந்த, நன்கு அறியப்பட்ட நாட்டுப்புற கலைஞரான விஞ்சாமுரி அனசுயா தேவி எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்**?**

**[A]** கர்நாடகா

**[B]** ஆந்திர பிரதேஷ்

**[C]** கேரளா

**[D]** மகாராஷ்டிரா

- ✓ திறம்பட்ட நாட்டுப்புறக் கலைஞர், வானொலி வர்ணனையாளர், ஹார்மோனிய இசை கலைஞர், இசை அமைப்பாளர் மற்றும் எழுத்தாளர் என்று பல கோணங்களில் அறியப்பட்ட விஞ்சாமுரி அனசுயாதேவி ஐக்கிய அமெரிக்காவில் உள்ள ஹவுஸ்டன் என்னும் இடத்தில் காலமானார்
- ✓ சமூகத்தில் பெண்கள் தங்கள் வீட்டை விட்டு வெளியே வருவதை ஒரு தீட்டாக பார்த்த காலங்களில் இவர் இசையை கருவியாகக் கொண்டு சமூக சமத்துவ செய்தியைப் பரப்பினார்
- ✓ 1920 ஆம் ஆண்டு காக்கிநாடாவில்(ஆ.பி) பிறந்த இவர் இந்திய சுதந்திர போராட்டத்தில் ஆர்வத்தோடு பங்கேற்றதோடு விடுதலைப் போராட்ட வீரர்களான மகாத்மா காந்தி , சுபாஷ் சந்திர போஸ், ஜவஹர்லால் நேரு ,சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் போன்றோர் முன்னிலையில் தமது திறமையையும் வெளிப்படுத்திக் காட்டினார்
- ✓ இவரது மாமா தேவலபள்ளி கிருஷ்ண சாஸ்திரி அவர்கள் இயற்றிய பிரபலமான தேசபக்தி பாடலான "ஜெய ஜெய ஜெய பிரிய பாரதி" என்னும் பாடலை இசையமைத்துப் பாடியுள்ளார்
- ✓ பாவ கீதலு மற்றும் நாட்டுப்புறப் பாடல்களின் தொகுப்பு ஆகிய இரு நூல்களை சமீபத்தில் இவர் வெளியிட்டார். 1977 ஆம் ஆண்டு ஆந்திர பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி சிறப்பித்தது. மேலும் "வாழ்நாள் சாதனையாளர்" என்ற விருதை அமெரிக்காவிலும் "நாட்டுப்புற அரசி" என்ற விருதை பாரிசிலும் பெற்றுள்ளார்.